செ.வெ.எண். 06/ஆகஸ்ட்                                                                                     நாள்.05.08.2020

## பத்திரிக்கைச் செய்தி

தருமபுரி மாவட்டம், கடத்தூரில் இயங்கி வரும் அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ / மாணவியர்களுக்கு 3 ஆண்டு கால பட்டயப் படிப்புக்கான (டிப்ளமோ) விண்ணப்பம் இணையதளத்தில் **https://www.tngptc.in** **(or)** **https://www.tngptc.com** என்ற முகவரியில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. இதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இணையதள வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்ய துவங்கும் நாள் 20.07.2020, இணையதள வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்ய இறுதி நாள் 20.08.2020, இணையதள வாயிலாக சான்றிதழ்கள் பதிவேற்றம் செய்ய துவங்கும் நாள் 10.08.2020, இணையதள வாயிலாக சான்றிதழ்கள் பதிவேற்றம் செய்ய இறுதி நாள் 20.08.2020 இப்பயிலக வளாகத்திலேயே மாணவர் மற்றும் மாணவியர்களுக்கு பாதுகாப்பான தனித்தனி விடுதி வசதிகள் உள்ளது. இதனை பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் திரு.ஜெயபால் (மு.கூ.பொ) அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி**